**S.C.No.171/2012** **PW 1** திரு**.** அங்குச்சாமி**.**

நாள் **-24.09.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு**,** சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரிகள் ஆஜர்**.**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:-**

சம்பத்தன்று கொடுக்கப்பட்ட புகாரை நான்தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 14.07.2010 அன்று நான் CI officer என்றால் சரிதான். எனது அலுவலகம் மதுரை, பைபாஸ் ரோட்டில் உள்ளதென்றால் சரிதான். 14.07.2010 அன்று தேவர் அமைப்பினர் பந்த் அறிவித்திருந்தனர் என்றால் சரிதான். அன்றைய தினம் பந்த் என்பதால் காளவாசல் பகுதியில் இருந்து நான்தான் எங்கள் கிளையில் இருந்த பேருந்துகளை அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் மேற்படி பேருந்துகளை காலை 09.00 மணியிலிருந்து 09.30 மணிக்குள் அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைத்தேன். சம்பவத்தைப்பற்றி நான் 09.40 மணியளவில் தகவல் தெரிந்து கொண்டேன். மேற்படி 09.40 மணியளவில் நான் தகவல் தெரிந்து கொண்டபின்பு சுமார் 10 நிமிடங்களில் காவல்நிலையத்திற்கு சென்றேன்.

09.50 மணிக்கு புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காததால்தான் நான் என் புகாரில் யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். என்னுடைய புகாரில் மேற்படி எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு எழுதியுள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே எனக்கு இவ்வழக்கின் எதிரிகள் பழக்கம் என்பதால் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை. மேற்படி நபர்கள் யாரென்றே எனக்குத் தெரியாது. நான் காவல் நிலையத்திலும், காவலர் விசாரணையில் மேற்படி நபர்கள் யாரென்று தெரியாதென்றும், அவர்கள் கும்பலாக வந்தார்கள் என்றும் தான் சொல்லியுள்ளேன். சம்பவமானது 09.30 மணியிலிருந்து 09.40 க்குள் நடந்ததென்றால் சரிதான். மேற்படி பேருந்துகளின் சேதமதிப்பினை நான் உத்தேசமாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக இவ்வாறு பேருந்துகளில் சேதம் ஏற்படின் ஓட்டுநர்தான் புகார் கொடுக்கவேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியுமென்றால் சரிதான். எங்கள் அலுவலக தினசரி நாட்குறிப்பினை இவ்வழக்கு சம்பந்தமாக காவலர் விசாரணையிலோ அல்லது நீதிமன்றத்திலோ .....

ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நாட்குறிப்பில் என்ன நடந்தது என்ற விபரத்தை குறித்து எழுதினேனா என்றால் எழுதினேன். நான் நாட்குறிப்பில் அவ்வாறு எழுதியிருந்தும் அது பாதகமாக இருப்பதால் அதை காவல் துறையினரிடமும் , நீதிமன்றத்திலும் அதைக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு கிளைக்கும் ஒரு பயணச் சீட்டு ஆய்வாளர் இருப்பார் என்றால் சரிதான். என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ள 14 பேருந்துகளில் எல்லீஸ்நகர் டிப்போ, திருமங்கலம் டிப்போ, புதூர் கிளை, குமுளி கிளை, மதுரை புற நகர் கிளை, மதுரை நகர் கிளை, திருப்பரங்குன்றம் கிளை, உசிலம்பட்டி கிளை போன்ற கிளைகளில் உள்ள பேருந்துகள்தான் மேற்சொன்ன 14 பேருந்துகள் என்றால் சரிதான். மேற்படி பேருந்துகளில் எங்களுடைய கிளையில் இருந்து மொத்தமாக 4 பேருந்துகள்தான் உள்ளது என்றால் சரிதான். மற்ற மாவட்ட பேருந்துகள் அல்லது மற்ற கிளை பேருந்துகளின் சேத மதிப்பினை அளவிட எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மற்ற மாவட்ட பேருந்துகள் விபத்திற்குள்ளானால் அந்தந்த மாவட்டங்களில் உள்ள C.I. Officer பார்த்துக் கொள்வார் என்றால்சரிதான். நான் சம்பவ சமயத்தில்

முதல் பேருந்தில் முதல் நபராக அமர்ந்திருந்தேன். நான் சென்ற பேருந்தானது தேனி செல்லும் பேருந்தாகும். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் மேற்படி விபரத்தினை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 14 பேருந்துகளின் சேதமதிப்பினை கணக்கிட்ட பின்பு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பேருந்தில் பயணம் செய்த பயணிகளுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பேருந்தில் கல்லைக் கொண்டு எறிந்தபோது அந்த இடத்தில் அந்த பக்கம் 10 பேர் மற்றும் இந்த பக்கம் 10 பேர் ஆக மொத்தம் 20 நபர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தில் எத்தனை மணிக்கு வந்தோம் என்றோ அல்லது சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததென்றோ நான் புகாரில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றாலும், இவ்வழக்கிற்கு பின்னிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் 9.50 க்கு புகார் கொடுத்தவுடனேயே முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் 09.50 க்கே சம்பவ இடம் வந்து எதிரிகளை கைது செய்து விட்டனர் என்றால் அது காவலர்களுக்குத்தான் தெரியும். போலீசார் யாரை எப்போது பிடித்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் ...

தெரியாது. காவல் துறையினர் என்னிடம் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - அங்குச்சாமி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No.171/2012 PW 2** திரு**.** பூமிராஜன்

நாள் **-24.09.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு**,** சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரிகள் ஆஜர்**.**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:-**

நான் உசிலம்பட்டி கிளையில் பணியாற்றி வருகிறேன். சம்பவத்தன்று உசிலம்பட்டியிலிருந்து மதுரை பெரியார் நிலையத்திற்கு பேருந்தினை இயக்கினேன். மற்ற சேதமடைந்த பேருந்துகள் பைபாஸ் ரோட்டிலிருந்து தேனி நோக்கி போன பேருந்துகள் என்றால் வண்டி அதிகமாக இருந்ததால் எனக்குத் தெரியாது. சம்பவமானது செக்கானூரணி வடிவேல் தியேட்டர் அருகில் நடந்தது. நான் சம்பவ இடம் போகும்போது அந்த இடத்தில் எத்தனை பேருந்துகள் இருந்தன என்றால் சுமார் 30 பேருந்துகள் வரை இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சுமார் 08.30 மணி முதல் 09.00 மணிக்குள் சென்றேன். எங்களுடைய பேருந்தில் காலை 08.30 மணியிலிருந்து 09.00 மணிக்குள் சேதம் ஏற்பட்டதென்றால் சரிதான். பேருந்தில் சேதம் ஏற்பட்ட சமயத்தில் எத்தனை போலீசார் ...

சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் போலீசார்கள் இருந்தார்கள். எத்தனை நபர்கள் என்று ஞாபகமில்லை. 09.00 மணிக்கு சம்பவம் நடந்தவுடனேயே காவலர்கள் சொல்லிதான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. அரை மணி நேரத்தில் அ.சா. 1 அங்குச்சாமி அவர்கள் சம்பவ இடம் வந்துவிட்டார். அவர் சொல்லித்தான் காவல்நிலையம் சென்றேன். அ.சா.1 அங்குச்சாமி மற்றும் போலீசாரிடம் நான் எங்கள்பேருந்துதான் முதலில் தாக்குதலுக்குட்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நானும், மற்ற பேருந்து ஓட்டுநர்களும் சம்பவ இடத்திலேயே சுமார் 10.00 மணி வரை இருந்தோம். அதற்கு பின்புதான் அ.சா. 1 சம்பவ இடத்திற்கு வந்தார். அவர் சொல்லிதான் நாங்கள் காவல்நிலையம் சென்றோம். காவல்நிலையத்தில் நான்தான் முதலில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் காவல்நிலையத்திற்கு சம்பவ இடத்திலிருந்து சுமார் அரை மணிநேரத்திற்குள் சென்றிருப்போம். காவல் நிலையத்தில் வைத்து ஓட்டுநர், நடத்துநர் பெயர்கள் மற்றும் பேருந்தின் சேத மதிப்புகள், பேருந்துகளின் எண்கள் ஆகியவற்றை சேகரித்தபின்பு சுமார் 11.00 மணியளவில் நாங்கள் காவல்நிலையத்திலிருந்து சென்றுவிட்டோம். அ.சா. 1 அங்குச்சாமி

கொடுத்த புகாரில் நான்தான் சாட்சிக் கையெழுத்து போட்டேனா என்றால் போடவில்லை. 14.07.2010 சம்பவம் நடந்ததிலிருந்து இன்று வரை என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் தெருவிற்குள் இருந்துதான் கற்கள் வந்ததென்றும், மேற்படிகற்களை அடையாளம் தெரியாத நபர்கள்தான் எறிந்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள தெருவானது சிறிய சந்து ஆகும். மெயின்ரோட்டிலிருந்து மேற்படி சந்திலுள்ள நபர்களை பார்க்கமுடியாதென்றால் சரிதான். அ.சா. 1 அங்குச்சாமியிடம் நான் சம்பவத்தைப் பற்றி சொன்னபோது, மேற்படி சந்திலிருந்து அடையாளம் தெரியாத நபர்கள் கல்லைக் கொண்டு எறிந்தனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அ.சா. 1 கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று உசிலம்பட்டியிலிருந்து மதுரை நோக்கி வந்த சுமார் 10 பேருந்துகள் இவ்வழக்கில் சேதமடைந்துள்ளன என்றால்

சரிதான். மதுரையில் இருந்து வந்த 1, 2 பேருந்துகள் தான் சேதமாகியிருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள பேருந்துகளின் எண்கள் அனைத்தும் உசிலம்பட்டியிலிருந்து மதுரை நோக்கி வந்த பேருந்துகளின் எண்கள் என்றால் அதன் எண்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் பேருந்துகள் மட்டும் உசிலம்பட்டியிலிருந்து மதுரைக்கு வந்தவைதான். எதிரிகளை எனக்கு நேரடியாகத் தெரியாதென்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - பூமிராஜன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No.171/2012** **PW 3** திரு**.** கோபாலகிருஷ்ணன்**.**

நாள் **-24.09.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு**,** சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரிகள் ஆஜர்**.**

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:-**

நான் கடந்த 15 ஆண்டுகளாக நடத்துநராக பணியாற்றி வருகிறேன். சம்பவத்தன்று எந்த ஊரிலிருந்து பேருந்தை இயக்கினேன் என்றால் உசிலம்பட்டியிலிருந்து மதுரை பெரியார் நிலையத்திற்கு பேருந்தினை இயக்கினேன். உசிலம்பட்டியிலிருந்து 08.15 மணியளவில் பேருந்தானது கிளம்பியது. உசிலம்பட்டியிலிருந்து பேருந்து கிளம்பும்போது அ.சா.1 அங்குச்சாமிதான் எங்களை அனுப்பிவைத்தாரா என்றால் இல்லை. உசிலம்பட்டியிலுள்ள வேறு பயணச்சீட்டு ஆய்வாளர்தான் என்னை அனுப்பி வைத்தார். சம்பவ இடத்திற்கு நாங்கள் சுமார் 09.00 மணிக்கு வந்தோம். உசிலம்பட்டியிலிருந்து எத்தனை பேருந்துகள் கிளம்பின என்றால் சுமார் 07 பேருந்துகள் மதுரை நோக்கி வந்தன. சம்பவ இடத்திற்கு நாங்கள் வரும்போது சம்பவ இடத்தில் மற்ற பேருந்துகள் சேதமாகி நின்றிருந்ததா அல்லது ....

எங்களுடைய பேருந்துதான் முதலில் சேதமானதா என்றால் எங்களுடைய பேருந்துதான் முதலில் சேதமானது. எங்கள் பேருந்து சேதமாகும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 09.00 மணி இருக்கும். நான் என்னுடைய முதல் விசாரணையில் சந்திலிருந்து நிறைய நபர்கள் கல்லைஎடுத்து எறிந்தனர் அதில்தான் எங்களின் பேருந்தானது சேதமானது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சந்தில் இருந்து 10, 20 நபர்கள் வரை கல்லைக் கொண்டு எறிந்தனர். மேற்படி நபர்கள் நான் நேரடியாகப் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த 09.00 மணிக்கே காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனர் என்றால் சரிதான். சம்பவ இடத்திலேயே ஓட்டுநர் மற்றும் நடத்துநர் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. C.I தான் காவல்நிலையத்தில் வைத்து புகார் கொடுத்தார். சம்பவம் நடந்தவுடன் நாங்கள் 09.15 மணியளவில் பணிமனைக்கு தகவல் தெரிவித்தோம். பணிமனையிலிருந்து அ.சா. 1 அங்குச்சாமி சம்பவ இடம் வருவதற்கு சுமார் அரை மணி நேரம் ஆனது. அ.சா. 1 அங்குச்சாமி எங்களிடம் பெயர் மற்றும் விலாசம் , சேத மதிப்பு ஆகியவற்றை கணக்கிட்டுதான் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 14.07.2010 ல் இருந்து இன்று வரை போலீசார் என்னை

விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், நான் அ.சா. 1 கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - கோபால கிருஷ்ணன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.